## சிறைச்சாலைகளை பாட சாலைகளாக மாற்றித் தந்தவர் முதல்வர்!

# இந்தியாவிலேயே மக்கள் பாதுகாப்பாக வாழும் மாநிலம் தமிழ்நாடு!

## சட்டப்பேரவையில் சட்டம் – சிறைத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலுரை!

**சென்னை, ஏப்.7–**

**சட்டப்பேரவையில் சட்டத்துறை - சிறைத்துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் அமைச்சர் எஸ்.ரகுபதி, “இந்தியாவிலேயே மக்கள் பாதுகாப்பாக வாழும் மாநிலம் தமிழ்நாடு!” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**பேரவையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி பதிலுரை வருமாறு:-**

இன்றைய இந்தியா முழுவதும் பேசும் பொருளாக இருக்கின்ற திராவிடத்தின் சிற்பி; பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரே வணங்குகின்றேன். நாடாளுமன்றத்தில் இந்திக்கு எதிர்ப்பு குரல் கொடுத்து, நாட்டையே வியக்க வைத்து இம்மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் பெற்று தந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணாவே! ‘உன் குரலோசை கேட்டு நாடாளுமன்றம் வியந்தது; உன் பாச மழை கண்டு திராவிடம் உன் வசம் வந்தது; உனக்கு தமிழ்நாடு அரியணை தந்தது’. உனக்கு என் வணக்கம். முத்தான தமிழ் இருக்க மும்மொழி எதற்கென முழக்கமிட்ட முத்தமிழ் அறிஞரே, எங்களுக்கு வெளிச்சம் தந்த தலைவர் கலைஞரே! நீங்கள் ஓய்வெடுக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒளி பிறந்தபோது மண்ணில் உயிர்கள் பிறந்ததையா! இங்கே நீ பிறந்த போது அப்பா என்ற வடிவில் குழந்தைகள் மகிழும் தெய்வம் வந்ததையா! (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிற்கும், வீட்டிற்கும், உலகிற்கும் வழிகாட்டும் நல்ல தலைவனை நாம் பெற்றிருக்கிறோம் என்று தமிழக மக்கள் மகிழும் திராவிட தலைவரே! உழைப்பு என்கிற குடும்ப சொத்தின் வாரிசாக வந்திருக்கின்ற தலைவர் கலைஞரின் பேரனே! அன்புக்குரிய தன் ஆளுமையால் தமிழக மக்களின் மனதை வென்றிருக்கும் திராவிட சூரியனின் புதல்வனே! எங்களின் துணை முதல்வரே! கலைஞர் வழியில் கலைத் துறை உனக்கு சொந்தம்; உன் உழைப்பாலே அரசியல் உனக்கு சொந்தம்; உன்னுடைய சனாதன எதிர்ப்பாலே திராவிட கொள்கைக்கு நீ சொந்தம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பாசத்திற்குரிய அவை முன்னவர்; கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, இந்தச் சட்டமன்றத்தை சிறப்போடு வழிநடத்தி செல்கின்ற எங்களுடைய பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக் கொறடா அவர்களே மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் (குறுக்கீடு) இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கம்.

ஒரு நாட்டின் அமைதி, மாநிலத்தின் அமைதி அங்கே நிலவுகின்ற சட்ட ஒழுங்கை ஒழுங்காக பராமரித்தல் மூலமே நிலை நிறுத்தப்படும். சட்ட ஒழுங்கு சரியாக இருக்கின்ற மாநிலங்கள் அமைதிப் பூங்காவாக திகழும். அத்தகைய அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு உருவாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு துணையாக இருக்கின்ற துறைதான் சட்டத் துறை. இங்கே மதநல்லிணக்கம் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு, பெண்கள் சுயமரியாதை சமத்துவத்தோடு வாழ்வதற்கு புதிய சட்டங்கள் தீட்டப்பட்டு இந்தியாவிலேயே மக்கள் பாதுகாப்பான மாநிலமாக வாழ்வதற்கு ஏற்ற இடமாக தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட ஒழுங்கு பேணிப் பாதுகாக்கப்படுவதால் உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், தமிழ்நாட்டை நோக்கி தொழிற்சாலைகள் வருகின்றன.

சிறந்த தொழில்கள் கிடைக்கின்றன. தொழில் வளர்ச்சிமூலம் இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெறுகின்றனர். விவசாயம் செழித்தோங்க வேளாண் சட்டங்கள் துணைபுரிகின்றன. கல்வி, மருத்துவம் இவை சிறந்து விளங்க, அடிப்படை சட்டங்களை தந்து அனைத்து துறைகளிலும் தமிழ்நாடு முன்னேற தமிழ்நாடு முதலமைச்சருக்கு துணையாக இருப்பது அரசின் சட்டத் துறை. சட்டத் துறையின் பணி என்பது சட்டங்களை இயற்றி, சட்டமன்றத்தில் நிறைவேற்றி, ஆளுநர் அல்லது குடியரசு தலைவருக்கு அனுப்பி, அவர்களுடைய ஒப்புதலை பெற்று சட்டம் ஆக்குவது மட்டுமல்ல. இயற்றப்பட்ட சட்டத்தை பாதுகாத்து நிலைநிறுத்துவதும் சட்டத் துறையின் தலையாய பங்காகும். (மேசையைத் தட்டும் ஒலி)

“அறத்தால் வருவதே இன்பம்” என்கிறார் வள்ளுவர். அறத்தால் இன்பம் வருகிறது என்று சொன்னால், சட்டத்தால் துன்பம் போகிறது. எனவே, அறமும் சட்டமும் இணைந்து நிற்கின்றன.

எதற்குமே ஒரு வரம்பு வேண்டும். கரை இல்லாத நீரோட்டம் நதியாகாது; வரப்பு இல்லாத நிலம் வயல் ஆகாது; சட்டம் இல்லாத வாழ்வு சமுதாய வாழ்வாகாது. ஓடும் நதியின் வரம்பு கரை, விளையும் வயலின் வரம்பு வரப்பு, சமுதாய வாழ்வின் வரம்பு சட்டம். சட்டம், ஒவ்வொருவருடைய உரிமைகளுக்கும் வரம்பிட்டு எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாக்கின்றது.

**சட்டமும் நீதியும் இணைந்து செயல்படவேண்டும்!**

சமூகத்தில் சமத்துவத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்த சட்டமும், நீதியும் இணைந்து செயல்பட வேண்டும். நீதியற்ற சட்டம், சமூகத்திற்கு பயனற்றதாகவே அமையும். எனவே, அனைத்து சட்டங்களும் நீதியை உறுதி செய்யும் விதமாக உருவாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சட்டமும், நீதியும் நம்முடைய வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள், அங்கங்கள். நல்ல சட்டங்கள் மக்களுக்கு பாதுகாப்பும் சமத்துவமும் வழங்க வேண்டும். நீதி மற்றும் சட்டம் இணைந்து செயல்பட்டால்தான் ஒரு சமூகம் அமைதியாகவும், வளமாகவும் இருக்கும்.

“சட்டம்” என்பது “நீதி நிர்வாகத்தில், அரசால் அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் கொள்கைகளின் தொகுப்பாகும்”, இது ஒரு ஒழுங்கான சமூகத்தின் அடித்தளமாகச் செயல்படுகிறது மற்றும் நியாயம், நிலைத்தன்மை மற்றும் தனிநபர் உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்கிறது.

“சட்டம்” என்பது சமூகத்தை சிறந்த, மிகவும் வளர்ந்த நாகரிகத்தை நோக்கி வடிவமைக்கும் மாற்றத்திற்கான ஒரு கருவியாக அமைந்துள்ளது. வளர்ந்து வரும் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக புதுமையான மற்றும் முற்போக்கான சட்டங்களை இயற்றுவதில் சட்டத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

சட்டத் துறை, அரசாங்கத்திற்கு சட்ட ஆலோசனைகளை வழங்குகிறது, கொள்கைகளை வரைவதிலும், மதிப்பாய்வு செய்வதிலும் உதவுகிறது மற்றும் சட்ட விஷயங்களில் மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சட்டத் துறை நீதியின் பாதுகாவலராகச் செயல்படுகிறது, சட்டத் துறை சட்டத்தின் ஆட்சியைப் பராமரிப்பதிலும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்ட வடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது. மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும்,

## இந்தியாவிலேயே பெண் நீதிபதிகள் அதிகமுள்ள நீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றம்தான்!

உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும், சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்படுகின்றன.

**சட்டத் தமிழ் புதிய பாடத் திட்டம்!**

அரசு சட்டக் கல்லூரிகளில் 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் ‘சட்டத் தமிழ்’ எனும் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலேய ஆட்சியின்போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதே மாநில சட்ட ஆணையத்தின் பணியாகும்.

மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இதுவரை 217 முதன்மை சட்டங்களும், 919 திருத்தச் சட்டங்களும் நீக்கறவு செய்யப்பட்டுள்ளன.

**சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை!**

தவறு என்பது தவறிச் செய்வது!
தப்பு என்பது தெரிந்து செய்வது!
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும்!
தப்பு செய்தவன் வருந்தியாகணும்!

என்ற கவிஞர் வாலியின் பாடல் வரிகளுக்கேற்ப சமுதாய கண்ணோட்டத்தில் ஒரு மனிதன் தவறு செய்யவோ, தப்பு செய்யவோ காரணமாக இருக்கக்கூடியது அவரது சந்தர்ப்ப சூழ்நிலைகள். எந்த மனிதனும் பிறப்பில் கெட்டவனாக பிறப்பது கிடையாது. அவனை நல்லவனாகவும், கெட்டவனாகவும் உருவாக்குவது சமுதாயம்தான். இந்த சமுதாயத்திலே குற்றம் செய்கின்றவர்களை கண்டுபிடித்து அவர்களை தண்டிக்கிற உரிமைகளை நீதித் துறை செய்தாலும், குற்றம் செய்தவர்களை திருந்தி வாழச் செய்து சமுதாயத்தோடு இணைந்து வாழ்கின்ற வழியை உருவாக்குகின்ற இடமாகத்தான் நமது தமிழ்நாடு சிறைசாலைகள் உள்ளன.

சிறைச்சாலைகளை நல்ல கருத்துகளை சொல்லித்தரும் பாட சாலைகளாக மாற்றித் தந்தவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறைகளிலே இருக்கின்றவர்களை குற்றவாளிகளாக கருதாமல், சிறை வாசிகளாகக் கருதி அவர்களுக்கு நன்நடத்தைகளைக் கற்றுத்தந்து,



அவர்களை திருந்தி வாழச் செய்கிற துறை தான் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை. தமிழ்நாட்டில் இன்றைக்கு 141 சிறைகள் உள்ளன. அதில் மொத்த அடைப்புகளின் எண்ணிக்கை 24,513. அங்கே இருக்கக்கூடிய அனுமதிக்கப்பட்டுள்ள தற்போதைய எண்ணிக்கை இன்றைக்கு இருக்கக்கூடிய எண்ணிக்கை 21,865. இன்றைய இந்தியாவில் சிறைகள் நவீனமயமாவதிலே தமிழ்நாடு சிறைச்சாலைகளுக்கு ஈடு இணையாக வேறு எந்த மாநில சிறையும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

## மாவட்டச் சிறைச்சாலைகள் – மத்திய சிறைச்சாலைகளில் நூலகம் அமைக்க அறிவுறுத்தியவர் முதல்வர்

சிறைகள் மற்றும் சிறை வாசிகளின் நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டத்தின் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கு உடல் அணிந்த கேமராக்கள், bodyworn cameras, 9 மத்திய சிறைச்சாலைகள் மற்றும் மாவட்ட சிறைச்சாலைகள், புதுக்கோட்டையில் இதுதொடர்பான சேவையகம், சிறைகள் சீர்த்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறைவாசிகளை சந்திப்பதற்கென தொலைபேசி மூலமாக முன்பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென பிரத்யேகமாக ஒரே எண்ணில் 10 இணைப்புகள் கொண்ட தொலைபேசி வசதிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த தொலைபேசி முன்பதிவு முறை உறவினர்கள், நண்பர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சிறைவாசிகளின் நேர்காணலுக்காக காத்திருக்கும் நேரத்தினை வெகுவாக குறைத்திருக்கிறது. சிறைக்கு காலையில் சென்று மாலை வரை காத்திருக்க வேண்டிய சூழ்நிலை இல்லாமல், ஒரு குறிப்பிட்ட timeக்கு சென்று அவர்களை சந்திக்க வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறது.

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. 2024 - 2025 ஆம் ஆண்டில் 135 சிறைவாசிகள் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 137 சிறைவாசிகள் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 247 சிறைவாசிகள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வும், 232 சிறைவாசிகள் 8 ஆம் வகுப்புத் தேர்வும் எழுதினார்கள். இந்த ஆண்டிலே 9,106 சிறைவாசிகள் பல்வேறு பாடப் பிரிவுகளை தொடர்ந்து பயின்று வருகின்றனர். இன்றைக்கு சிறைச்சாலைகளிலே இருக்கக்கூடிய சிறைவாசிகளுக்கு நூலகங்கள் அவசியம் தேவை. அதை அவர்கள் படிப்பதன் மூலமாக பொது அறிவைக் கற்றுக்கொள்வதோடு, நன்னடத்தையும் கற்றுக்கொள்ள முடியும் என்பதை நன்கு உணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்து மாவட்டச் சிறைச்சாலைகள், அனைத்து மத்தியச் சிறைச்சாலைகள் இவற்றிலெல்லாம் நூலகத்தை ஏற்படுத்தச் சொல்லி, அந்த நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்குவதை தன்னுடைய கடமையாகக் கொண்டிருக்கிறார். இன்றைக்குகூட நூலகத்திற்கு 1,500 நூல்களை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சிறைச்சாலைக்கு தந்திருக்கிறார் என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**சிறைச் சாலைகளுக்கு நூல்கள் வழங்கிய முதல்வர்!**

எல்லாவிதமான புத்தகக் கண்காட்சியிலும் சிறைச்சாலைக்கு என்று ஓர் இடத்தைத் தந்து, அங்கே Book Bank, யாரெல்லாம் சிறையிலே இருக்கக்கூடிய சிறைவாசிகளுக்கு புத்தகங்களை நன்கொடையாக கொடுக்க விரும்புகிறார்களோ அங்கே கொடுத்து, அதன் மூலமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை சிறையிலே இருக்கக்கூடிய சிறைவாசிகளுக்கு பெற்றுத் தந்திருப்பவரும் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான். எனவே, சிறையிலே நூலகங்களும் இருக்க வேண்டும், சிறைவாசிகள் படிப்பிலே அக்கறையும் கொண்டிருக்க வேண்டும் என்கிற உன்னத நோக்கத்தோடு 90 சதவிகிதத்திற்குமேல் இன்றைக்கு தேர்ச்சி பெறுகிற சிறைவாசிகளைக் கொண்டிருக்கிற சிறைப் பள்ளிகளாக இன்றைய சிறைவாசி கள் இருக்கின்றனர். 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதுகின்றவர்கள் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு கல்வி அறிவு போதிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனி அக்கறை எடுத்துக்கொண்டு சிறந்த ஆசிரியர்களை அங்கே நியமித்துத் தந்தது ஒரு காரணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, சிறைகளிலே நெசவு தொழில், காலணி உற்பத்தி போன்றவை எல்லாம், விவசாயம் போன்றவையெல்லாம் செய்யப்படுகிறது. அதில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. சிறைகளில் நடத்தப்படுகிற petrol bunk, அங்கிருக்கக்கூடிய நன்னடத்தை சிறைவாசிகளுக்கு தினசரி ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, ஒரு சிறைவாசி சிறையிலே இருக்கிற காலத்திலே, வெளியில் தான் இருந்தால் தன் குடும்பத்திற்கு எந்த அளவிற்கு, மாதாமாதம் அவர்கள் தன்னுடைய குடும்பத்திற்கு ஓர் ஊதியத்தை தர முடியுமோ, அதை சம்பளமாகத் தருகிற நிலைமையை சிறையிலே இருந்து அந்த சிறைவாசி உருவாக்கிக் கொடுக்கக்கூடிய நிலைமையை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும், அதன் மூலமாக இன்றைக்கு பல சிறைவாசிகளின் குடும்பங்கள் பலனடைந்திருக்கின்றன என்பதையும் இங்கே நாங்கள் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே சிறை மீண்ட சிறைவாசிகளுக்கான ஓர் அமைப்பது இருப்பது நம்முடைய தமிழ்நாட்டிலேதான். அவர்களுடைய நலனுக்காக ஒரு சங்கம். பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டு, தொடர்ந்து அவர்கள் சிறையிலே இருக்கக்கூடிய நிர்வாகத் தோடு தொடர்பு கொள்ளக்கூடியவர்களாக தங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப சிறை நிர்வாகத்தில் இருக்கக்கூடிய தங்களுடைய சங்கத்தின் மூலமாக நிதி உதவி பெறுகின்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் நாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம். கடந்த 2023 ஆம் ஆண்டிலே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு அவர்களுக்கு 3 கோடியே 50 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறது. ஒரு சிறைவாசிக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம் இந்த ஆண்டிலே நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் 3 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். ஒரு சிறைவாசிக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது என்பதை நாங்கள் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம். எனவே, சிறையிலிருந்து வெளியே சென்றாலும், அந்த சிறைவாசியினுடைய குடும்பத்திலே அக்கறை கொண்டவர்களாக அவர்களுடைய நலனிலே, அவர்கள் திருந்தி வாழ்கின்றபொழுது அவர்களுக்கு உதவி செய்வதிலே இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும்தான் இன்றைக்கு இப்படிப்பட்ட ஓர் அமைப்பை கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் இன்றைக்கு திருந்தியவர்கள், திருந்தியவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் மீண்டும் குற்ற செயல்களில் ஈடுபடுவது தடுக்கப்படுகிறது என்பதை நாங்கள் இங்கே தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீதி நிருவாகம். ஒரு அரசின் வெற்றி என்பது சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் பாதுகாத்து, அந்த நாட்டை அமைதி பூங்காவாக திகழ வைத்து, மக்களை நிம்மதியாக வாழ வைப்பதே ஆகும். இதுவே மக்களாட்சி தத்துவம். அந்த தத்துவத்தை சிறப்பாக நிலை நிறுத்துவதற்கு நீதி துறையும், நீதி நிர்வாகமும் சிறந்த முறையில் செயல்பட்டாக வேண்டும். அப்பொழுதுதான் சட்ட ஒழுங்கு சீர்குலையாமல் அமைதியான மாநிலமாக அந்த நாடு இருக்க முடியும். அப்படியான தமிழ்நாட்டை உருவாக்கி தந்திருக்கின்ற தலைவர் தளபதிக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய துறைகள்தான் நீதி நிர்வாகமும், சட்டத் துறையும். சமுதாயத்தில் குற்றங்கள் பெருகுவதை தடுத்து நிறுத்தி, பெருகிவரும் குற்றங்களை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதி நிர்வாகத்தின் ஒத்துழைப்போடு சட்டத் துறை சிறப்பாக செயல்பட்டாக வேண்டும். அமைதி பூங்காவாக திகழ்கின்ற மாநிலமாக இன்றைக்கு தமிழகத்தை உருவாக்குவதற்கு சட்டத் துறையும், நீதி நிர்வாகமும் இணைந்து செயல்படுவதுதான் அடிப்படை அம்சங்களாக உள்ளன.

‘கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று’திருடனை கொல்வது தவறல்ல என்று சிலப்பதிகாரம் சொல்கிறது. எனவேதான், போக்சோ குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையாக மரண தண்டனை விதிக்க வேண்டுமென்கிற சட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கிறது.

**போக்சோ வழக்குகள்!**

தமிழ்நாட்டிலே 1,338 நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 73 புதிய நீதிமன்றங்கள் அமைக்க நாங்கள் ஒப்புதல் தந்திருக்கின்றோம். அதில், 49 நீதி மன்றங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன.

**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்**

என்று குறள் சொல்கிறது. கொடிய செயல்களைச் செய்வாரைக் கொலை தண்டனையால் தண்டித்தும், சமூகத்தை முறையாக காத்தும் ஆட்சி செய்வது, பசும் பயிரில் களையெடுப்பது போன்ற சிறந்த செயலாகும். எனவேதான், இன்றைக்கு போக்சோ வழக்குகள் இன்றைக்கு பேசு பொருளாக உருவாகி இருக்கின்றன. அதற்கு அடிப்படை காரணம், முதலமைச்சர் அவர்கள் பெண்களை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு தைரியத்தை தந்து அச்சத்தை போக்கியதால்தான் ஆகும். பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் கொடுத்தால் F.I.R. போடுவதற்கே பல நாட்கள் காத்திருந்த அந்தக் காலத்தில், இப்போது பெண்கள் பயந்து புகார் கொடுப்பதை தவிர்த்து இருக்கின்றனர் என்றால், அதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதுதான் உடனடி காரணம் என்பதை இங்கே நாங்கள் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம். அதன் காரணமாகவே போக்சோ வழக்குகள் அதிகரித்துள்ளன. பொருளாதார குற்ற பிரிவு வழக்குகள், வணிக குற்ற வழக்குகள், cyber crime வழக்குகள், மகளிர் உரிமையை நிலை நாட்டிக் கொள்ளும் வழக்குகள் போன்றவை எல்லாம் இன்றைக்கு மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கி இருக்கின்ற காரணத்தாலும், அதற்காக தனித்தனியே புதிய நீதிமன்றங்கள் உருவாகி இருக்கின்ற காரணத்தாலும், மக்கள் நீதிமன்றங்களை நாடுகின்ற சூழல் ஏற்பட்டு இருக்கின்றது. இன்றைக்கு நீதிமன்றங்களின் தேவை அதிகரித்திருப்பது என்று சொன்னால் அதற்கு காரணம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதே தவிர வேறு அல்ல.

கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றானும் தோன்றா தாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு.
என்பது பழமொழி.

**அதிக அளவில் பெண் நீதிபதிகள்!**

சிறியோர் என்ன தவறு/குற்றம் செய்தாலும் சமூகத்தால் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படாது. ஆனால் பெரியோர் ஒரு சிறு தவறு செய்தாலும் குன்றுமேல் வைத்த விளக்குப்போல் அனைவருக்கும் தெளிவாய் தெரிந்துவிடும்.

தற்பொழுது, நம்முடைய சென்னை உயர்நீதிமன்றத்திலே 14 பெண் நீதிபதிகள் இன்றைக்கு பணிபுரிந்து வருகிறார்கள். இந்தியாவிலேயே அதிகமான பெண் நீதிபதிகள் பணிபுரிந்து வருகின்ற உயர் நீதிமன்றம் நம்முடைய சென்னை உயர் நீதிமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்**

என்கிறது புறநானூறு. நாட்டில் நீதிமுறைமை காக்கப்பட வேண்டின் நன்மை தருவனவற்றைச் செய்யாது இருந்தாலும் இருக்கலாம். தீமை தரும் செயல்களைச் செய்யக் கூடாது. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி அதைப் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் பேசினார்கள். அதற்கு என்னென்ன பணம் கொடுத்திருக்கிறோம் என்பதையெல்லாம் நான் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன்.

2021 முதல் 2025 வரையிலான கால கட்டங்களில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற சிறைத் துறை மக்கள் நீதிமன்றங்கள் மூலம் 1,687 சிறு குற்ற வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு, 1,014 கைதிகள் விசாரணை நாள் அன்றே விடுவிக்கப்பட்டனர்.

**சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை**
**அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு**
**ஒருங்கு அகப் படேஎன் ஆயின்; பொருந்திய**
**என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது,**
**கொடியன்எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!**

என்கிறது புறநானூறு. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன்னை இகழ்ந்தோரை போரில் வெற்றி பெறுவேன். பெறாது போனால், நீதிமுறை தவறிய அரசன் என்று என்னை என் மக்களே தூற்றட்டும் என்பதிலிருந்து அவனது நீதியைக் காப்பதில் உள்ள பேராண்மை வெளிப்படுகிறது.

இதையே இன்றைய அரசனாக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் மதுரை அரிட்டாபட்டி டங்ஸ்டன் கனிம சுரங்க திட்ட பிரச்சினை சட்டமன்றத்தில் வந்தபோது நான் முதலமைச்சராக இருக்கும் வரை ஒருபோதும் டங்ஸ்டன் கனிம சுரங்க திட்டத்தை அனுமதிக்கமாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அந்த திட்டம் வந்தால் நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்க மாட்டேன் என்று சொன்னதன்மூலம் அவரது நீதியை காக்கும் பேராண்மை வெளிப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள்

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

**முஸ்லிம்களின் முதுகில் குத்தும் ஒன்றிய பாசிச பாஜக!**

